அனுப்புநர்
திரு.க.முக்கையா, பி.இ.,எம்டெக்.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
இனாம் கரூர், பழைய நகராட்சி கட்டிடம்
கரூர் நகராட்சி பில் கலெக்சன் சென்டர்,
பெரியகுளத்து பாளையம்,
கரூர் மாவட்டம்-639 001
E Mail id : ad.karur.dist@gmail.com
Ph.No: 04324-223625

பெறுநர்
திரு.R.சேகர் த/பெ.ராமசாமி,
க/எண்-3/324, NSK நகர்,
வடிவேல் நகர்,
ஆண்டாங்கோவில் கீழ்பாகம்,
மண்மங்கலம் வட்டம்,
கரூர் மாவட்டம்.

ந.க.எண்.1184/2020/கமா. நாள்.02.02.2021.

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அலுவலகம் - கரூர் மாவட்டம் - மண்மங்கலம் வட்டம் - தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் - ஆண்டாங்கோவில் மேல்பாகம் கிராமம் - சர்வே எண்கள்-661/2 மற்றும் 661/4-ல் 1.724ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - விபரம் தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை:
1) மனுதாரர் திரு.R.சேகர், கரூர் அவர்களின் கடிதம் மற்றும் அதன் இணைப்புகள் பெறப்பட்ட நாள்-28.11.2020, 07.01.2021 மற்றும் 02.02.2021.(இணையதள விண்ணப்ப பதிவு எண்-202002501019357, நாள்-26.11.2020)
2) அரசாணை எண்-16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-31.01.2020.
3) அரசாணை எண்-18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-04.02.2019.
4) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-4367/2019பிஏ-2, நாள்-05.02.2020.
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-12201/2017சிபி, நாள்-28.09.2017.
6) தலைவர், ஆண்டாங்கோவில் மேற்கு ஊராட்சி அவர்களின் கடிதம் எண்-79/2020-2021, நாள்-05.01.2021.(தீர்மான எண்-463/2020-2021, நாள்-31.12.2020)
7) இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்-24.12.2020.

-----

...2

மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அலுவலகம், கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், ஆண்டாங்கோவில் மேல்பாகம் கிராமம், சர்வே எண்கள்-661/2 மற்றும் 661/4-ல் 1.724ஏக்கர் பரப்பளவுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, "ம.வ/மாநஊஉஇ(கமா) எண்.14/2021" என எண்ணிட்டு, தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு, நிபந்தனைகளுடன் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

எனவே மனுதாரர், மேற்படி மனைப்பிரிவு இறுதி ஒப்புதலுக்காக தலைவர், ஆண்டாங்கோவில் மேற்கு ஊராட்சி அவர்களை அணுகுமாறு அறிவித்துக்கொள்ளப்படுகிறது.

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கரூர் மாவட்டம்.

# ஆண்டாங்கோவில் (மேற்கு) ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை : திரு. K.M. பெரியசாமி

ஆ.மு.ந.க.எண். 102/2020–2021 நாள். 19.02.2021
எண். 06/2020–2021

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – கரூர் மாவட்டம் – தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் – ஆண்டாங்கோவில் மேற்கு ஊராட்சி சர்வே எண். 661/2 மற்றும் 661/4 நெ.ஹெக் 0.69.78 ஏர்ஸ் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவிற்கு இறுதி நிலை ஒப்புதல் வழங்கி உத்திரவிடல் – தொடர்பாக.

பார்வை : 1) அரசாணை (நிலை) எண் 71, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள். 16.06.2013.
2) மனுதாரர் திரு. R. சேகர், த/பெ. ராமசாமி என்பவரது விண்ணப்பம் நாள். 15.02.2021.
3) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் மாவட்டம், அவர்களின் கடிதம் எண் ந.க.எண். 1184/2020 கமா நாள்.02.02.2021 ம.வ./ந.ஊ.உ..இ.(க.மா) எண்.14/2021
4) ஆண்டாங்கோவில் மேற்கு ஊராட்சி மன்ற தீர்மான எண்.463/2020–2021 நாள்.31.12.2020–ன் படி நன்கொடை ஆவண பத்திரம் எண். 41/2021 நாள். 31.12.2020

உத்தரவு,

கரூர் மாவட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், ஆண்டாங்கோவில் மேற்கு ஊராட்சி சர்வே எண். 661/2 மற்றும் 661/4 நெ.ஹெக் 0.69.78 ஏர்ஸ் பரப்பு கொண்ட இடத்தில் அமையும் மனைப்பிரிவிற்கு பார்வை 3 –ல் காணும் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களின் 02.02.2021 ஆம் நாளைய கடிதத்தில் மேற்படி இடத்தில் அமையும் வரைபடத்திற்கு உரிய நிபந்தனைகளுடன் ம.வ./மா.ந.ஊ.உ.இ.(க.மா) எண்.14/2021 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3 –ல் காணும் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் விதமாக மனை அளவுகளை பிரித்தும், சாலைகள் மற்றும் சாக்கடைகள் போன்ற அடிப்படை வசதிகள் மனுதாரரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அரசாணையின்படி மனைப்பிரிவு அங்கீகார கட்டணமாக ஏக்கருக்கு ரூ.5000/– வீதம் நெ.ஹெக் 0.69.78 ஏர்ஸ் உள்ள மனைப்பிரிவிற்கு தொகை ரூ.8620–னை பல்வகை இரசீது எண். 37964 நாள். 19.02.2021–ன்படி ஆண்டாங்கோவில் மேற்கு ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. ஆண்டாங்கோவில் மேற்கு ஊராட்சி மன்ற தீர்மான எண். 463/2020–2021 நாள். 31.12.2020, மேலும் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டிய மனைப்பிரிவு சாலை, பொது இடம் 0.96% மற்றும் தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கான 0.95% இடம் ஆகியவற்றை பார்வை 4–ல் காணும் ஆவணம் பத்திரம் எண். 41/2021 நாள். 31.12.2020 மூலம் ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையிலும், கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களது தொழில் நுட்ப ஒப்புதல் அடிப்படையில், நிபந்தனைகள் ஏதேனும் விடுபட்டிருப்பின் அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் ஆண்டாங்கோவில் மேற்கு ஊராட்சி கிராமம் சர்வே எண். 661/2 மற்றும் 661/4 நெ.ஹெக் 0.69.78 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவிற்கு இறுதி நிலை ஒப்புதல் வழங்கி இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

K.M. [signature]
19/02/2021

ஊராட்சி மன்ற தலைவர்/செயல் அலுவலர்,
ஆண்டாங்கோவில் மேற்கு ஊராட்சி,

நகல் :
உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் மாவட்டம்.